பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
09 05 2025 **FRIDAY 12.40 PM** வெள்ளிக்கிழமை

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- பாகிஸ்தான் தாக்குதலுக்கு நேற்றிரவு ராணுவம் தக்க பதிலடி கொடுத்துள்ள நிலையில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.
- சர்வதேச செலாவணி நிதியத்தில் இருந்து பாகிஸ்தானுக்கு ஒன்று புள்ளி மூன்று பில்லியன் டாலர் கடனுதவி வழங்கக்கூடாது என்று இந்தியா வலியுறுத்தும் என்று வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.
- ஜம்மு காஷ்மீரின் எல்லையில் இன்று காலை பாகிஸ்தானிலிருந்து ஊடுருவ முயன்ற ஏழு தீவிரவாதிகளை எல்லை பாதுகாப்புப்படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.
- பெட்ரோல், சமையல் எரிவாயு போன்றவற்றை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி சேமித்து வைக்க வேண்டாம் என்று இந்தியன் ஆயில் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டி அருணாச்சலப்பிரதேசத்தில் இன்று தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>

பாகிஸ்தானின் தாக்குதலுக்கு நேற்றிரவு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்துள்ள நிலையில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று காலை முப்படைகளின் தளபதிகளுடன் புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

நாட்டின் எல்லைப்பகுதியில் தற்போதைய நிலை குறித்தும், பதில் தாக்குதல் நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் சமீர் காமத்துடன், ராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது மற்றும் திட்டமிட்ட பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் திரு ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார்.

நவீன தொழில்நுட்பங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் பாதுகாப்பு அமைச்சர் கேட்டறிந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

சர்வதேச செலாவணி நிதியத்தில் இருந்து பாகிஸ்தான் ஒன்று புள்ளி மூன்று பில்லியன் டாலர் கடனுதவி கோரும் மனுவை பரிசீலிக்கக்கூடாது என்று இந்தியா வலியுறுத்தும் என்று வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

செயற்குழு வாரியக்கூட்டத்தில் இந்தியா சார்பில் கலந்துகொள்ளும் நிர்வாக இயக்குனர் திரு பரமேஸ்வரன் நாயர் இந்த கோரிக்கையை முன்வைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற கொள்கையில் செயல்பட்டுவரும் பாகிஸ்தானுக்கு இந்த நிதியுதவியை சர்வதேச அமைப்பு வழங்கக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச செலாவணி நிதியத்தின் இதர நிர்வாகிகளும் இந்தியாவின் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அமைப்புகளிடமிருந்து பெறும் நிதியுதவியை பாகிஸ்தான் தொடர்ந்து முறைகேடாக பயன்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே, சர்வதேச செலாவணி நிதியத்தில் இருந்து பெற்ற கடனுதவியை லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது போன்ற சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் பயன்படுத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்த அமைப்புகளை ஐ நா தடை செய்துள்ளதையும் திரு விக்ரம் மிஸ்ரி சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, உத்தரப்பிரதேச மாநிலம் கோரியுள்ள கடனுதவி குறித்து பரிசீலிப்பதற்காக லக்னோ வந்துள்ள உலக வங்கியின் தலைவர் திரு அஜய் பங்கா, அம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி குறித்து ஆய்வு செய்தார்.

முன்னதாக, அவர் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசியபோது, சிந்துநதி ஒப்பந்தம் தொடர்பாக இந்தியா எடுத்துள்ள முடிவில் உலக வங்கி எவ்வித தலையீடும் செய்யாது என்றும் உறுதியளித்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனையும் உலக வங்கியின் தலைவர் சந்தித்து பேசியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் ஊடுருவ முயன்ற ஏழு தீவிரவாதிகளை எல்லை பாதுகாப்புப்படையினர் இன்று காலை சுட்டு வீழ்த்தினர்.

பாகிஸ்தான் ராணுவத்தின் உதவியுடன் பயங்கர ஆயுதங்களுடன் இந்த தீவிரவாதிகள் ஊடுருவியதாக எல்லை பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

மேலும், பல தீவிரவாதிகளை பாதுகாப்புப்படையினர் தேடி வருகின்றனர்.

ஜம்மு, சம்பா மற்றும் ஆர் எஸ் புரா பகுதிகளில் ட்ரோன்கள் மற்றும் குறைந்த தூரம் சென்று தாக்கவல்ல பாகிஸ்தான் நாட்டின் ஏவுகணைகளையும் இந்திய ராணுவம் தடுத்து நிறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அம்மாநிலத்தில் உள்ள அரசு ஊழியர்கள், காவல்துறையினர், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப்பணியாளர்களுக்கான விடுப்பு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை இந்தியா – பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளில் உள்ள மாவட்ட நிர்வாகங்கள் வெளியிட்டுள்ளன.

பார்மர் மற்றும் ஜெய்சால்மர் பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வீடுகளிலேயே தங்கியிருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் எக்காரணம் கொண்டும் மக்கள் வெளியில் வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காவல்துறையினர் ரோந்து பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

பெட்ரோல், சமையல் எரிவாயு போன்றவற்றை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி சேமித்து வைக்க வேண்டாம் என இந்தியன் ஆயில் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

தேவையான அளவு பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு கையிருப்பில் உள்ளதாகவும், அதன் விநியோகம் சீராக நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் போர் பாதுகாப்பு ஒத்திகை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இன்று, தமிழகத்தின் இரண்டு இடங்களில் பாதுகாப்பு ஒத்திகை நடைபெறவுள்ளது.

நெல்லை மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், வடசென்னை அனல்மின் நிலையம் ஆகிய இடங்களில் மாலை 4 மணிக்கு இந்த ஒத்திகை நடைபெறும் என்று மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இதற்கான முன்னேற்பாட்டுப்பணிகள் முழுவீச்சில் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - திருமலைக்குமார் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

இந்தியாவும் - சிலியும் ஒட்டுமொத்த பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடிவு செய்துள்ளன.

புதுதில்லியில் உள்ள சிலி நாட்டு தூதர் Juan Angulo மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் இணைச்செயலர் திரு விமல் ஆனந்தும் இதற்கான ஒப்புதல் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, வர்த்தகத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இம்மாதம் 26-ஆம்தேதிமுதல், 30-ஆம் தேதிவரை இருநாடுகளுக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமானதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை மாநில அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம் பஞ்சப்பூரில் 408 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தையும், பல்வேறு திட்டப்பணிகளையும் இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி ஒன்பது புள்ளி ஆறு ஒன்பது சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின்கீழ், நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோரும், புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் 34 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரும் பயன்பெற்று வருவதாக கூறினார்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவுத்திட்டம் போன்றவையும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் ஒரு பெண்ணுக்கு நிபா வைரஸ் தாக்குதல் கண்டறியப்பட்டதையடுத்து, அம்மாவட்டத்தில் உள்ள வளஞ்சேரி உள்ளிட்ட பஞ்சாயத்துகள் நோய் கட்டுப்பாட்டுப்பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய் தொற்று பரவாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திருமதி வீனா ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அவர், மலப்புரத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

நோய் கட்டுப்பாட்டுப்பகுதி அறிவிக்கப்பட்ட பஞ்சாயத்துகளில் பொதுமக்கள் கூடுவதை தவிர்க்க வேண்டும் என்றும், உடல் நல பாதிப்பு கண்டறியப்பட்டவுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் மாநில சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

பறவைகள் மற்றும் விலங்குகள் கடித்த பழங்கள் மற்றும் காய்கறிகளை கண்டிப்பாக உணவுக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என்றும் சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.

நோய் கட்டுப்பாட்டு பஞ்சாயத்துகளில் உள்ள அங்கன்வாடி மையங்கள் மற்றும் மதரசாக்கள் மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டி அருணாச்சலப்பிரதேசத்தில் இன்று தொடங்குகிறது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டடத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

மற்றொரு ஆட்டத்தில் பங்களாதேஷ் - மாலத்தீவு அணியை எதிர்கொள்கிறது

<<<<<<END>>>>>